மகப்பேற்றுக்கால

மதுப்பாவனை

# மூடத்தனமான நம்பிக்கை

எமது நாட்டுப் பெண்கள் மது அருந்துவது பற்றிய புள்ளி விபரங்கள் இல்லாவிட்டாலும் இவர்கள் மது அருந்துவதில்லை எனக் கூறிவிடமுடியாது. குறிப்பாக மகப்பேற்றுக்காலத்தில் கட்டாயமாக மது அருந்த வைப்பது இன்று ஒரு சம்பிரதாயமாகி விட்டது.

பிள்ளை பெற்ற தாய்க்குப் பசி ஏற்படுத்த மது தேவை என்னும் நம்பிக்கை ஆழ வேரூன்றியுள்ளது. உண்மைக்குப் புறம்பான இந் நடவடிக்கை மாதர்கள் பலரை மதுவுக்கு அடிமையாக்கி விடுகின்றது. இயற்கையாகவே கர்ப்பவதியின் உடலில் மேலதிக உணவு சேமித்து வைக்கப்படுகின்றது, இது மனிதருக்குமட்டுமல்ல மிருகங்களுக்கும் பொருந்தும். சத்துணவும் சரியான பராமரிப்பும் கர்ப்பவதியைக் கர்ப்பகாலத்துக்கு மட்டுமல்லாது பாலூட்டும் காலத்துக்கும் தயார்ப்படுத்துகின்றன. பிள்ளை பிறந்த ஒரு சில நாள்களுக்கு உடலின் சேமிப்பு உபயோகமாகும்.




முதல் நாளிலிருந்தே தாய் தனது பிள்ளைக்கு அடிக்கடி பாலூட்டவேண்டும். ஆரம்பத்தில் சிறிதளவு பால்மட்டுமே சுரக்கும். இவ்வாறு கொடுத்து வர நாளந்தம் சுரக்கும் பாலின் அளவுஅதிகரித்து உடலிலுள்ள சேமிப்புணவு குறையத்தொடங்கும். சேமிப்புணவு குறையக் குறைய பசிஇயல்பாகவே ஏற்படும்.

அப்போது தேவையான உணவைக் கொடுக்கவேண்டும். அத்துடன் தாயின் உடலிலிருந்து சிறுநீராகவும், பிள்ளைக்குப் பாலாகவும் வெளியேறும் நீர் மீளளிக்கப்படவேண்டும். தவறின் பால்சுரப்பதும் பாதிக்கப்பட்டு சிறு நீரகநோய்களும்

ஏற்படலாம். ஆனால் விசேடமாகப் பயிற்று விக்கப்பட்ட பராமரிப்பாளர்கள் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தவிடாமல் கண்காணிப்பார்கள், பல்வேறு காரணங்கள் சொல்லிப் பட்டினி போடுவார்கள். இதன் விளைவாக பிள்ளைக்கு வெளிநாட்டு மாடுகளின் பாலும் தாய்க்குப் பல்வேறு நோய்களுக்கு மருந்தும் அதிகசெலவில் ஏற்பாடு செய்யப் படும். உண்மையில் மகப்பேறடைந்த பெண்ணுக்கு குடி பானமாக 'மதுபானம்' கொடுப்பதிலும் பார்க்க தாகமடங்கத்தண்ணீரும் பசியடங்க நல்ல உணவும் கொடுப்பதுவே சிறந்தது, அதிகசெலவில்லாதது; வரவேற்கத்தக்கது.

''வயிற்றுப் புண்ணை ஆற்றுவதற்கு மதுஅவசியம்'' என்பவர்களும் உள்ளனர். உண்மையில் இரைப்பையினுள் செல்லும் மது அங்கு அரிப்பு ஏற்படுத்திப் புண்களைத் தோற்று விக்குமே தவிர, புண்களைக் குணப்படுத்துவதில் பங்கெடுப்பதில்லை.

கருப்பையில் ஏற்படும் மாற்றம் புண் அல்ல. கருப்பை ஒரு விசேட உறுப்பாகும். இதன் உட்பக்கச் சுவர்கள் கருவைப் பேணும் வகையில் விருத்தியடைவதும், கருக்கட்டல் நிகழாத போது சிதைவடைந்து வெளியேறுவதும், மீண்டும் விருத்தியடைவதுமாகத் தொடர்ச்சியான மாற்றத்துக்கு ட்படுகின்றன. இவ்வாறு இவை சிதைவடைந்து வெளியேறும் ஒவ்வொரு தடவையும் மாத விலக்கு ஏற்படும் போது, புண்வந்து விட்டதென்று யாரும் 'மருந்து' குடிப்பதில்லை

கருக்கட்டல் நடைபெற்றுக் குழந்தை உருவாகும்போது கருப்பையின் அகப்படைக் கலங்கள் நன்கு விருத்தியடைந்து, குழந்தையைப் பேணுகின்றன, குழந்தை பிறந்ததும் சிதைவடைந்து வெளியேறுகின்றன. அதிக விருத்தியடைந்திருந்தால் அதிக அளவில் வெளியேறுகின்றன. இதில் புண் என்று எதைச் சொல்வது?

---

## டாக்டர் க. சிவபாலன்

---

மகப்பேற்று அறுவைச் சிகிச்சையினாலோ அல்லது குழந்தை பிறக்கும் போது யோனியில் ஏற்பட்ட பாதிப்புக்களினாலோ புண்கள் ஏற்பட்டால் அவை சரியான முறையில் தைக்கப்பட்டு, தொற்று ஏற்படாமல் சக்திவாய்ந்த மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இவற்றைக் குணப்படுத்துவதில் மதுவின் பங்கு எதுவுமேயில்லை.

மகப் பேற்றுக் காலத்தில் மது அருந்துவதனால் நன்மைக்குப் பதிலாக தீமையே உண்டாகின்றது. மதுவை மருந்து என்று அருந்திய சில பெண்கள் பின்னர் மதுவுக்கு அடிமையாகி, நோய்

வாய்ப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இது தவிர இப் பழக்கத்தினால் குழந்தைக்கும் பாதிப்புகள் ஏற்படலாம் என அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

**மருந்து என்று மதுவைத் தொட்டவர்கள் ஈற்றில் மதுவுக்கே அடிமையாகும் நிலை!**

ஒரு பெண் கர்ப்பவதியாக இருக்கும் போது, குறிப்பாக முதல் மூன்று மாதத்தில் மது அருந்துவது குழந்தையை மோசமாகப் பாதிக்கின்றது என நிருபிக்கப்பட்டுள்ளது. தாயின் குருதியிலிருந்து குழந்தையின் உடலை அடையும் மது குழந்தையின் விருத்தியைப் பாதிக்கின்றது. இதனால் குழந்தை வளர்ச்சி குன்றியதாகவும், அங்கக் குறைபாடுகள் உள்ளதாகவும் மூளை விருத்தியற்றதாகவும், அதிகம் நோய்வாய்ப்படும் தன்மையுள்ளதாகவும் பிறக்கும். சில வேளைகளில் கரு அழிந்து விடும் அபாயமும் நேரிட்டு விடுகின்றது.

குழந்தை பெற்றபின் அருந்தும் மது தாய்ப்பாலுடன் குழந்தைக்கும் கிடைக்கின்றது, இதனால் பிறந்தவுடன் மது அருந்திய பெருமை பிளளைக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு குழந்தைக்குச் சேரும் மது சிறிதளவாக இருந்தாலும் அது அக் குழந்தையின் தசை இயக்கங்களை, அவை மீதுள்ள மூளையின் கட்டுப்பாடுகளைப் பாதிக்கும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. குழந்தையின் உடல்-உள விருத்தியின் முக்கிய கால கட்டத்தில் மது ஏற்படுத்தும் தாக்கம் - பிற்காலத்தில் ஏற்படுத்தும் அனர்த்தங்கள் ஏராளமாகவே இருக்கும்.

மகப் பேற்றுக்கால மருத்துவத்தில் மதுவின் பாவனையை விலத்திவைப்பதே தாய் - சேய் நலனுக்கு உகந்தது என்பதை விஞ்ஞான உலகம் இன்று நிருபித்திருக்கின்றது.

குழந்தையை வயிற்றிலும் பின்னர் மடியிலும் சுமக்கும் பொறுப்பு இயல்பாகவே பெண்ணிடம் வந்துவிடுகின்றது, அப் பெண்ணுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பு என்பனவற்றுடன் பிள்ளை பிறந்தபின் பிள்ளைக்குரிய உணவு, உபகரணங்கள், நல்ல சூழல் என்பனவற்றை வழங்குவது ஆணின் பொறுப்பாகின்றது.

மூட நம்பிக்கைகளைக் களைந்து ஆரோக்கியமான வாழ்வுக்கு அத்திவாரமிடும் பொறுப்பும் இவர்களையே சார்ந்திருக்கிறது.